**தீர்ப்புரை**

எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற எண்.191/2025 ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :

1) வாதியானவர் கடந்த 18.03.2025 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு தனது வீட்டையும் வீட்டின் கேட்டையும் பூட்டிவிட்டு பக்கத்து வீதியில் உள்ள வாதியின் தங்கை சாட்சி–3 நிதயா வீட்டில் சாவியை கொடுத்துவீட்டு வீட்டை பார்த்து கொள்ளச் சொல்லிவிட்டு புறப்பட்டு தனது மனைவி மகனையும் தாராபுரம் கூட்டிச் சென்று கரூருக்கு பஸ் வைத்து அனுப்பிவிட்டு கோட்டமங்கலம் வின்ட் மில்லுக்கு சென்று அங்கேயே தங்கி வேலை செய்து வந்ததாகவும, வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் எதிரி திவான் என்கிற சுப்ரமணியன் என்பவர் வீடுகளின் பூட்டை உடைத்து திருடி அதன் மூலம் செல்வத்தை சேர்த்து தனது திருமணத்தை நடத்திக் கொள்ளலாம் என்றும், அவரது சுயலாபத்திற்காக திருட வேண்டும் என்ற நோக்கத்துடன் பூட்டியிருந்த வாதியின் வீட்டின் காம்பவுண்ட் கேட்டை கடந்த 23.03.2025 ஆம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு ஏறி குதித்து வீட்டின் முன் கதவை எதிரி வைத்திருந்த இரும்பு ராடால் கதவை நெம்பி பூட்டை உடைத்து அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து ஸ்டோர் ரூமில் இருந்த இரும்பு பீரோவை நெம்பி திறந்து துணிகளை கலைத்துப்போட்டு பீரோவின் லாக்கரில் வாதி வைத்திருந்த தலா ½ பவுனில் இரண்டு மோதிரம், ¼ பவுன் தோடு ஒரு செட் என மொத்தம் 1 ¼ பவுன் மற்றும் அதே பீரோவில் இருந்த பணம் ரூ.10,000/– யும் திருடிக் கொண்டு போகும் நகைகளை பார்த்தபோது மங்கிப் போய் பித்தளைபோல் இருந்ததால் எதிரி தன் வீட்டுக்கு போகும் வழியில் ஆமந்தகடவு அருகில் இருந்த ஒரு குளத்தில் வீசி எரிந்தும் திருடிய மேற்படி பணத்தை சேவல் சண்டையில் பெட்டிங் வைத்து பணம் கட்டி விளையாடி

கலைக்கப்பட்டும் இருந்துள்ளது. பீரோவில் உள்ள ½ பவுன் மோதிரம் –2, ¼ பவுனில் தோடு –2 அ.சா.4 ன் மனைவியின் நகைகளும் மற்றும் பணம் ரூ.10,000/– திருடுபோயுள்ளது. உடனே தங்கை கணவரிடம் தகவல் கூறி, அவர்கள் பார்த்துவிட்டு தங்கையின் கணவர் சுரேஷ் 22ம் தேதி அங்கு வந்து தண்ணீர் குடித்துவிட்டு பூட்டிவிட்டு சென்றதாக கூறியுள்ளார். பின்னர் அ.சா.4 ன் மனைவி நகைகளை எடுத்து சென்றிருப்பாரா என்று விசாரிக்கலாம் என்று ஊருக்கு சென்று குழந்தைக்கு மொட்டை அடித்துவிட்டு மனைவியிடம் கேட்ட போது அவர் நகைகளை வீட்டில் வைத்துவிட்டு வந்ததாகவும் எடுத்து வரவில்லை என்று கூறியுள்ளார். அதன் பிறகு உடுமலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். புகார் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15) பின்னர் எதிரியை பிடித்தால் தெரிவிப்பதாக போலிசார் கூறியுள்ளனர். சரியாக தெரியவில்லை ஒரு மாதம் கழித்து திருடிய நபரை பிடித்ததாக சொல்லியுள்ளார்கள். காவல் நிலையம் சென்று போய் பார்த்தபோது ஆஜர் எதிரியை தான் காவல் நிலையத்தில் வைத்து பார்த்துள்ளார். நகைகள் அ.சா.4 க்கு கிடைக்கவில்லை. நகைகளை கவரிங் நகை என்று நினைத்து குளத்தில் ஆஜர் எதிரி வீசி விட்டதாகவும், பணத்தை சேவல் சண்டையில் செலவு செய்து விட்டதாகவும் எதிரி சொன்னதாக போலிசார் கூறியுள்ளனர். இழந்த நகைகள் மற்றும் பணத்தை திரும்ப பெறவும் உரிய நஷ்ட ஈடு பெற வேண்டியும் நீதிமன்றத்தை கேட்டு கொண்டுள்ளார்.

16) அ.சா.5 தீபா என்பவர் இந்திரா நகரில் வசித்து வருகிறார். கடந்த 18.03.2025ம் தேதி பரமத்தி வேலூர் திருவிழாவிற்கு செல்ல வேண்டி இருந்ததால் அ.சா.5 ன் கணவர் அவரையும் குழந்தையும் அழைத்து சென்று கருர் பேருந்தில் ஏற்றிவிட்டு சென்றுள்ளார். வீட்டை பூட்டிவிட்டு சாவியை

முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

24) இதனை பொறுத்து அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில் புகார்தாரர் அ.சா.4 ஆனவர் தனது சாட்சியத்தில் இந்திரா நகர் வெற்றி அவென்யுவில் வசித்து வருவதாகவும், கடந்த 18.03.2026 ஆம் தேதி காலை 6.15 மணியளவில் வீட்டையும் கேட்டையும், பூட்டிவிட்டு சாவியை தங்கை முறையான நித்யா என்பவரிடம் சாவியை கொடுத்துவிட்டு சென்றதாகவும், பின்னர் கடந்த 23.03.2025 ம் தேதியன்று வீட்டிற்கு சென்று வீட்டின் கேட்டை திறந்து பார்த்த போது இவ்வழக்குச் சம்பவம் நடைபெற்றிருந்ததாக கூறியுள்ளார். அ.சா.2 ஆனவரும் அ.சா.1 ன் சாட்சியத்திற்கு ஒத்துபோகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

25) மேலும், அ.சா.2 கிருஷ்ணமூர்த்தி முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி தனது முதல் விசாரணையில் கடந்த 26.03.2025 ம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் தண்டபாணி த/பெ. ஆறுமுகம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.7 ஆன புகார் மனுவினை பெற்று அ.சா.ஆ.2 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்குக் கோப்பை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துவிட்டு, சம்பவ இடம் சென்று அன்றைய தினம் 17.45 மணிக்கு சாட்சிகள் மோகன்குமார் மற்றும் ரகு ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.3 ஆன மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.4 ஆன பார்வை மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார்.

26) இந்நிலையில் பார்வை மகசர் சாட்சியான அ.சா.6 ரகு என்பவர் தனது முதல் விசாரணையில் கடந்த 26.03.2025 ம் தேதி மாலை 5.30–6.00 மணியளவில் தான், தனது நண்பர் விக்ரம் வீட்டின் வழியாக தனது வீட்டிற்கு சென்றபோது விக்ரம் வீட்டில் கூட்டமாக இருந்ததாகவும், போலிசார் அங்கு இருந்ததாகவும், என்ன என்று கேட்ட போது விக்ரம் வீட்டை உடைத்து நகை

இயலாது.

30) எனவே, இவ்வழக்கின் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆனவர்களின் முதல் விசாரணையில் சம்பவ இடம், தேதி மற்றும் நேரத்தை பொறுத்து ஒத்துபோகும் வகையில் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையிலும், இவ்வழக்கிற்கு வலுவூட்டும் வகையில் அ.சா.ஆ.3 ஆன மாதிரி வரைபடமும், அ.சா.ஆ.4 ஆன பார்வை மகசரும் அமைந்துள்ளதும் தெரியவருகிறது. ஆகையினால், மேற்கண்ட விவாதங்களில் இருந்தும், சாட்சிய சான்றாவணங்களில் இருந்தும், இவ்வழக்கின் சம்பவ தேதி, நேரம், இடத்தை பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

31) இந்நிலையில் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் இல்லாத நிலையில் அரசு தரப்பானது எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்களை (Chain of Circumstance Evidence) தொடர்பு படுத்தி எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபித்துள்ளதா என பரிசீலிக்க வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாகும்.

32) இந்நிலையில், இவ்வழக்கில் எதிரியின் அடையாளம் மற்றும் குற்றச் செயல்களைப் பொறுத்து அ.சா.ஆ.7 ஆன புகாரினைப் பரிசீலிக்கையில் மேற்படி சம்பவ தினத்தில் வீட்டிற்கு வந்து பார்த்தபோது இரும்பு கம்பியால் நெம்பி கதவு மற்றும் நிலவு உடைந்து கிடந்ததாகவும், ரூமில் இருந்த இரும்பு பீரோவில் துணிகள் களைந்து சிதறியும், பீரோவின் லாக்கரில் வைத்திருந்த மனைவியின் சுமார் ½ பவுனில் இரண்டு தங்க மோதிரம் மொத்தம் 1 பவுன், தோடு ஒரு செட் ¼ பவுன் மொத்தம் 1 ¼ பவுன் ரூ.10000/- ஆகியவகைள் காணவில்லை என்றும், திருடு போன பொருட்களின் மதிப்பு சுமார் ரூ.22500/- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

33) இதனைப் பொறுத்து அ.சா.3 புலன் விசாரணை அதிகாரியின் முதல்

அனுமதிக்கப்பட்ட பகுதியான அ.சா.ஆ 5 ஆனதை பதிவு செய்து சாட்சி மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்றதாகவும் சொல்லியுள்ளார்.

37) இந்நிலையில் அ.சா.1 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியின் முதல் விசாரணையில் எதிரியானவர் 8 வீடுகளில் திருடியதைப் பொறுத்தும் இவ்வழக்கில் வெற்றி அவென்யூ நகரில் திருடிய நகைகளை பித்தளை பொருட்கள் என கருதி ஆமந்த கடவு குளத்தில் வீசி விட்டதாகவும், பணத்தை சேவல் சண்டையில் செலவு செய்ததாக எதிரி கூறியதாகவும் சொல்லியுள்ளார்.

38) இதனைப் பொறுத்து அ.சா.4 ன் முதல் விசாரணையில் வீட்டின் உள்ள பீரோவில் இருந்த துணிமணிகள் கலைக்கப்பட்டு இருந்ததாகவும், பீரோவில் உள்ள ½ பவுன் மோதிரம் –2, ¼ பவுனில் தோடு –2, தனது மனைவியின் நகைகளும் மற்றும் பணம் ரூ.10,000/– திருடுபோனதாகவும், நகைகள் தனக்கு கிடைக்கவில்லை என்றும், நகைகளை கவரிங் நகை என்று நினைத்து குளத்தில் ஆஜர் எதிரி வீசி விட்டதாகவும், பணத்தை சேவல் சண்டையில் செலவு செய்து விட்டதாகவும் எதிரி சொன்னதாக போலிசார் கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 ஆனவரும் அ.சா.4 ன் சாட்சியத்திற்கு ஒத்துப் போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் இவ்வழக்குச் சொத்தானது கிடைக்கவில்லை என்பது தெரியவருகிறது.

39) மேலும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.3 ன் குறுக்கு விசாரணையில் மேற்படி ஒப்புதல் வாக்குமூலமானது கம்ப்யூட்டர் ஆப்ரேட்டரால் மடிக்கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் கூறியுள்ள நிலையில், தொடர் குறுக்கு விசாரணையில் எதிரியை கைது செய்வதாக சொல்லக்கூடிய இடத்திற்கு கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் அழைத்துச் சென்றதாகவும் வழக்குக் கோப்பில் எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும் கூறியுள்ளார்.

